**தலைப்பு 254 – பதிவாளர் நாயகம் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 254 – பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூலை 12 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க தகவல் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மூலதன செலவினம்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய மூலதன செலவினங்களைக் கணக்கீடு செய்த போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏசீஏ-6) மீளாய்வாண்டில் கொள்வனவாக ரூபா 114,328,048 காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழான மூலதன செலவினமாக ரூபா 131,050,045 காண்பிக்கப்பட்டமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளில் | திறைசேரியிலிருந்து கிடைத்த ஆலோசனையின் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாட்டின் கீழ் மூலதன செலவினத்தின் கீழ் மூலதன சொத்துக்கள் புனரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான ரூபா 12,847,899 தொகையும், மூலதன சொத்துக்களைக் கைப்பற்றல் ரூபா 114,328,048 தொகையும், | சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குவதை கண்காணித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்து உருவான தேறிய மறை காசுப்பாய்ச்சல் ரூபா 16,721,997 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. அது காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காண்பிக்க வேண்டிய மூலதன சொத்துக்கள் புணரமைத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கான ரூபா 12,847,899 மற்றும் இயலுமை அபிவிருத்திக்கான ரூபா 3,874,098 இனையும் உள்ளடக்கியிருந்தது. | இயலுமை அபிவிருத்திக்கான ரூபா 3,874,098 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் நிதியல்லாச் சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ACA-6) இல் மூலதன சொத்துக்கள் கைப்பற்றல்களுக்கான ரூபா 114,328,047 தொகை மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | மீளாய்வாண்டில் மூலதன சொத்துக்கள் கைப்பற்றல்களுக்காக ரூபா 182,827,098 செலவிடப்பட்டிருந்த போதிலும் ரூபா 114,328,047 மாத்திரம் நிதியல்லாச் சொத்துக்களாக நிதி நிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 68,499,051 ஆன சொத்துக்கள் நிதி நிலைமைக்கூற்றில் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அந்த சொத்துக்கள் மாவட்ட செயலகங்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்தவைகள் என அவதானிக்கப்பட்டது. | ரூபா 182,827,098 தொகையில் நிதிப்பிரமாணம் 208 கீழ் ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 68,489,051 உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அந்த செலவினம் நிதியல்லாச் சொத்துக்களாக CIGAS முறைமையில் இனங்காணப்படாதிருந்தமை யால் அது நிதிநிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களைக் கைப்பற்றல்களாக இனங்காணப்படவில்லை. மேலும் அந்த நிதியேற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சொத்துக் கொள்வனவுகள் உரிய மாவட்ட செயலகங்களின் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களின் அசைவு தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் வேண்டும். |

**2.		நிதி மீளாய்வு**

**2.1		வருமான முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 3,160,269 மொத்த நிலுவைத் தொகையில் எந்தவொரு தொகையும் மீளாய்வாண்டின் போது அறவிடப்படாதிருந்ததுடன் அறவீடுகள் தொடர்பான தகவல்கள் பேணிச்செல்லப்படாமையினால் ரூபா 12,191,593 நிலுவை மற்றும் தண்டப்பண வருமான மீதி தொடர்பாக 2019 யூலை 23 ஆம் திகதிய இலக்கம் 11/2019 என்ற பதிவாளர் நாயக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆரம்ப மீதியில் பல வருட காலம் முதல் காணப்படுகின்ற நிலுவை / தண்டப்பண மீதியும் உள்ளடங்கியிருந்ததுடன் 2019.07.23 ஆந் திகதி முதல் நிலுவை / தண்டப்பணம் திணைக்களத்தின் மூலம் அறிவிடப்படாதிருந்ததுடன் அறிக்கைகளில் பேணிச் செல்லப்படுகின்ற அந்த மீதிகள் புத்தங்களிலிருந்து நீக்குவதற்கு உரிய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 44 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 20,806,353 மற்றும் ஆண்டில் விதிப்பனவுகள் ரூபா 7,111,533 அறிவிட வேண்டிய ஒட்டுமொத்த தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 7,451,243 தொகை மாத்திரமே அதாவது 27 சதவீதம் மாத்திரமே அறிவிடப்பட்டிருந்தது. | ஆண்டின் ஆரம்ப மீதி ரூபா 20,806,353 மற்றும் ஆண்டின் விதிப்பனவுகள் ரூபா 7,111,533 ஆக இருந்த போதிலும் ஆண்டில் அறவீடுகள் ரூபா 7,451,243 ஆக காண்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு போதியளவான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஆரம்ப வருமான மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 8 மில்லியனுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட சட்டத்தரணிகளுக்கு மேல் நீதிமன்ற சான்றிதழ் விநியோகித்தல் கட்டணம், ரூபா 11 மில்லியன் வரை 38 சதவீதத்தால் அதாவது ரூபா 3 மில்லியனால் அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் திருத்தப்பட்ட வருமான மதிப்பீட்டில் 19 சதவீதத்தால் அதாவது ரூபா 2,060,808 இனால் குறைவடைந்திருந்தது. | ஆரம்ப மதிப்பீடு ரூபா 8 மில்லியனுக்கு தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் 2023.05.31 ஆந் திகதி வரையில் உள்ளபடியான வருமானத்தைக் கவனத்தில் கொண்டு ரூபா 11 மில்லியனுக்கு திருத்தப்பட்ட மதிப்பீடு அதிகரிக்கப்பட்ட போதும் 2023 ஆம் ஆண்டின் போது புதிய சட்டத்தரணிகளை சேர்த்தல் குறைவடைந்ததன் காரணமாக சேகரிக்கப்பட்ட வருமானம், திருத்தப்பட்ட வருமானத்தில் 19 சதவீதத்தால் குறைவடைந்ததற்கு காரணமாக இருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான ஆய்வுடன் வருமானம் மதிப்பீடு தயாரிப்பதை கண்காணித்தல் வேண்டும். |
| (ஈ) | நிதிப்பிரமானம் 143(2)(ஊ) மற்றும் நிதிப்பிரமாணம் 175(2) இன் பிரகாரம் நிலுவை வருமானத்தை சேகரிப்பதற்கு அறவிடமுடியாத வருமானத்தைக் கைவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக பல ஆண்டுகள் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை வருமானம் ஒன்று சேர்ந்து காணப்பட்டதுடன் பணத்தை சேகரித்தல் தொடர்பில் உத்தியோகத்தரின் கவனமின்மை அல்லது செயற்திறனின்மையின் காரணமாக இருக்குமாயின் அது தொடர்பாக நிதிப்பிரமாணம் 176(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பல ஆண்டுகள் முதல் அறவிடுவதற்கு முடியாதிருந்த நிலுவைப் பணத்தை கைவிடுவதற்கான கட்டளை, கணக்கீட்டு உத்தியோகத்தரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் இது தொடர்பாக கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கணக்கீடு செய்யப்பட்டுள்ள நிலுவை வருமானத்தை உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 சனவரி 27 ஆம் திகதிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் 6(இ) பந்தியின் பிரகாரம் பதவியணியினர் பயிற்சிக்கான செலவினத்தின் கீழ் அந்தந்த உத்தியோகத்தர்களினால் தகைமைகள் பூர்த்தி செய்வதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய கட்டாய பயிற்சிகளுக்காக மாத்திரம் சந்தர்ப்பம் வழங்க வேண்டியிருந்த போதிலும் அந்த தொகுதிக்குள் வராத மநாடுகள், செயலமர்வுகள் மற்றும் ஒன்றுகூடல்கள் உத்தியோகத்தர்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற வெளியில் அனுப்பப்படுகின்ற பயிற்சிகளுக்காகவும் ரூபா 2,595,372 செலவிடப்பட்டிருந்தது. | திணைக்களமயப்படுத்தப்பட்ட சுற்றறிக்கை, கட்டளைகள் தொடர்பாக அவர்களின் பணிப்பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான விடயங்களை மேவுகை செய்யும் வகையில் அந்தந்த உத்தியோகத்தர்களால் தகைமைகளை பூர்த்தி செய்வதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய கட்டாய பயிற்சிகளுக்காக பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்படுவதுடன் உத்தியோகத்தர்களின் அறிவினை நாளதுவரையாக்குவதற்காக காலரீதியிலும் தேவையான விடயங்களில் மிகவும் முக்கியமாக இருந்தமையால் ஒட்டுமொத்த உத்தியோகத்தர்களும் அதற்காக பயிற்சியளிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மென்பொருள் அபிவிருத்திக்கான ரூபா 199,000,000 இயந்திரம் மற்றும் இயந்திர உபகரணங்களை கைப்பற்றல்களுக்கான ரூபா 3,500,000 மற்றும் தளபாடப்பொருட்கள், அலுவலக உபகரணங்களைக் கைப்பற்றுவதற்காக ரூபா 3,500,000 ஆக ஆண்டின் ஆரம்ப செலவின மதிப்பீடு முறையே ரூபா 114,000,000 தொகை, ரூபா 78,500,000 மற்றும் ரூபா 13,500,000 | திணைக்களத்தின் தரவு மேவுகை முறைமையை நாளதுவரையாக்குவதற்கான பெறுகை செயற்பாடுகள் இரத்துச் செய்யப்பட்டதன் காரணமாக ரூபா 85 மில்லியன் தொகை நிதிப் பிரமாணம் 66 மாற்றல்களின் கீழ் ரூபா 75 மில்லியன் தொகை 254-1-2-2103 செலவின விடயத்திற்கும், ரூபா 10 மில்லியன் தொகை 254-1-2-2102 செலவின விடயத்திற்கும் மாற்றப்பட்டிருந்தது. | முன்னுரிமை அடிப்படையில் ஆண்டில் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| வரை திருத்தப்பட்டிருந்ததுடன் அது ஆரம்ப மதிப்பீட்டினை விட முறையே 51 சதவீத குறைவும், 1956 சதவீதம் மற்றும் 285 சதவீத அசாதாரண அதிகரிப்பும் ஆகும். மென்பொருள் அபிவிருத்திக்கான செலவினத்தின் குறைவடைந்தமை பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்கள் வரையறுத்தலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும் அது கணனி மற்றும் அச்சிடல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக செலவிடப்பட்டிருந்தது. | | |

**2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பொறுப்புக்கள் பதிவேட்டின் பிரகாரம் 14 செலவின விடயங்களின் பொறுப்புக்கள் ரூபா 133,990,340 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 74,669,984 ஆனமையால் ரூபா 59,320,356 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வாடகை, நீர், மின்சாரம், பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகள் போன்ற அத்தியாவசிய செலவினங்களும், வருமானத்தை உழைப்பதற்காக நேரடியாக பங்களிக்கின்ற நிழற்பட பிரதி சேவைகளுக்காகவும் போதியளவான நிதியேற்பாடு தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களம் மூலம் வழங்கப்படாமையின் காரணமாக எல்லையினை மிஞ்சி பொறுப்புக்களுக்கு உடன்படுவதற்கு ஏற்பட்டிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியேற்பாட்டின் வரையறையில் செலவினங்களை முகாமைத்துவம் செய்து கொள்வதற்கு கண்காணித்தல் வேண்டும். |
| (ஆ) 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய இலக்கம் 255/2017 என்ற அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 04 ஆம் | சுற்றறிக்கையின் பிரகாரம் CIGAS கணனி முறைமையில் நாளாந்தம் கிடைக்கின்ற உறுதிச்சீட்டுக்கள் முதலாவது கடப்பாடாக உள்ளடக்கப்பட்ட | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| பந்தியின் பிரகாரம் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்களைத் தீர்க்கும் செயற்பாடுகளில் சகல படிமுறைகளும் சிகாஸ் கணக்கீட்டு முறைமையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பின்னர் கொடுப்பனவு செய்யப்படுவதுடன் அவ்வாறு உள்ளடக்கப்படாமல் செலுத்துவதற்கு முடியாததிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |

**2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்கங்களால் வழங்கப்பட்ட நிதியேற்பாட்டின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| பிம்சவிய கொள்வனவுகளுக்காக மீளாய்வாண்டின் போது சுற்றுலா மற்றும் காணி அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 25 மில்லியன் நிதியேற்பாடுகளில் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ரூபா 23.28 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன் முதலீட்டு சாதகமான சூழல் ஒன்றை வடிவமைப்பதற்காக முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சிலிருந்து வழங்கப்பட்ட ரூபா 12 மில்லியன் நிதியேற்பாடுகளில் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 7.21 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | உரித்துறுதி சான்றிதழ் அச்சிடுவதற்காக தேவையான GSM அளவில் கடதாசிகள் பெற்றுக்கொள்ளல் வசதியீனத்தின் அடிப்படையில் 45,000 அளவில் மாத்திரமே அச்சிடப்பட்டிருந்தது. அந்த அச்சிடல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யும் போது 2023.12.19 ஆம் திகதியான இருந்ததுடன் அந்த அளவிற்காக உள்ளபடியான செலவினம் ரூபா 569,250 மாத்திரம் ஆகும். ரூபா 1.4 மில்லியன் நிதியேற்பாடு காணி அமைச்சிற்கு கையளிக்கப்பட்டதுடன் சான்றிதழ் அச்சிடுவதற்காக செலவான ரூபா 569,250 செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 321,541 நிதியேற்பாடு செலவிடப்படாமல் மீள் அனுப்புவதற்கு ஏற்பட்டிருந்தமையும் முதலீட்டு மேம்படுத்தல் அமைச்சு வழங்கியிருந்த ரூபா 12 மில்லியன் நிதியேற்பாடுகளில் அந்த செயற்பாடுகளை மேற்கொண்ட உத்தியோத்தர்களுக்காக மேலதிக நேரம் அங்கீகாரம் கிடைக்காமையின் அடிப்படையில் அந்த பணத்தை பயன்படுத்துவதற்கு முடியாதிருந்தமையும் அறிவிக்கப்பட்டுள்ளது. | ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிதி விடயங்களுக்கான செலவிடுவதற்கு கண்காணித்தல் வேண்டும். |

## 2.5 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் / கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2019 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழே குறிப்பிடுகின்ற விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்கின்றமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வினைச் செய்து அதன் பிரகாரம் முறைமையை ஆக்கபூர்வமாக கொண்டு செல்வதற்காக தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தமையும் அதன் மீளாவ்வொன்று எழுத்து மூலம் மேற்கொண்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டமைக்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமையை பயனுள்ளதாக பேணிச்செல்வதற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் பெறுகைத் திட்டம் மற்றும் நிதிப்பிரமாண அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசியு கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு கீழே தரப்பட்டுள்ளது.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள் | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | 1988 இன் 74 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் திருத்த சட்டம் மற்றும் 1994 பெப்ரவரி 18 ஆம் திகதிய இலக்கம் 04/1994 என்ற நீதியமைச்சின் சுற்றறிக்கை | 2015 முதல் 2022 ஆம் ஆண்டு வரை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான வருடாந்தக்கூற்று இரண்டு உத்தியோகத்தரால் வழங்கப்படாதிருந்ததுடன் 21 உத்தியோகத்தர்களின் அறிக்கை குறைவாக வழங்கப்பட்டிருந்தது. | பல வருட காலமாக சொத்துக்கள், பொறுப்புக்கள் கூற்று வழங்காதிருந்த உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டிற்காக 2024.03.01 ஆந் திகதிய இலஞ்ச அல்லது ஊழல் ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2024 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தினதும் சுற்றறிக்கையினதும் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக் கோவை | | | |
| | VI ஆம் அத்தியாயத்தின் 2.10 ஆம் பிரிவு | பதிவாளர் சேவையின் III ஆம் வகுப்பின் II தரத்தில் சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதுடன் இதன் பின்னர் சரியாக நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| | XII ஆம் அத்தியாயத்தின் 38.18 ஆம் பிரிவு | அரசாங்க உத்தியோகத்தர்கள் நாட்டிலிருந்து வெளியே செல்கின்ற விடுமுறை தொடர்பான அறிக்கையொன்று மாதந்தோறும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதுடன் இதன் பின்னர் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கிணங்க செயற்திறனாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| XV ஆம் அத்தியாயத்தின் 10 ஆம் பிரிவு | பதவி நிலை / நிறைவேற்றுத் தரத்தில் அரசாங்க பதவியில் இருக்கின்ற உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக இலங்கையிலிருந்து வெளியே செல்வதற்கு முன் பிரதமரின் முன் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தின் பதவி நிலை / நிறைவேற்று நிலையில் 05 உத்தியோகத்தர்கள் அவ்வாறு முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் நாட்டிலிருந்து வெளியே சென்றிருந்தனர். | திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் இலங்கையில் இருந்து வெளிச்செல்வதற்கு முன் அதற்கான அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரம் பெற்று பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்காக ஒவ்வொரு காலஎல்லையின் போதும் பங்குபற்றியிருந்ததுடன் அதற்காக அமைச்சரிடமிருந்து விடுமுறை அங்கீகரித்துக் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பதவி நிலை / நிறைவேற்று நிலையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் பிரதமரின் முன் அங்கீகாரம் பெறல் வேண்டும். |
| XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | 07 வருடங்கள் முதல் 28 வருட காலப்பகுதியில் 20 உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிட வேண்டிய ரூபா 886,949 கடன் மீதி புத்தங்களிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 07 வருடம் முதல் 28 வருட காலப்பகுதியில் வேலை நீக்கம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஏனைய உத்தியோகத்தர்களிடமிருந்து மேலும் அறவிடக்கூடிய கடன் மீதி தொரடர்பான தகவல்களை வழங்குவதற்கும், அவ்வாறு இல்லையாயின் கடன் மீதியை பதிவழிப்பதற்கும் அமைச்சு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் சட்டமாதிபரின் ஆலோசனை பெறல் போன்ற நடவடிக்கைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | |
| | இலக்கம் 756 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 11.1 ஆம் பந்தி | 2022 ஆம் ஆண்டு வரை வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் மெய்மையாய்வு சபை நியமிக்கப்படாதிருந்ததுடன் கடந்த ஆண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் களஞ்சிய இருப்புத் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2022 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்படாதிருந்ததை ஏற்றுக்கொள்வதுடன் திணைக்களத்திற்கு புறம்பாக வெளியிலுள்ள அங்கத்தவர்கள் இருவரை உள்ளடக்கிய ஐந்து அங்கத்தவர்களை கொண்ட சபையொன்று மூலம் விசேட பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டதுடன் பின்னர் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த பொருள் மெய்மையாய்வு தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் பிரமானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 2310/29 என்ற அதிவிசேட வர்த்தமாணியின் மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணி நடைமுறை விதி இலக்கம் 158 | ஒவ்வொரு வருடமும் சனவரி 01 மற்றும் யூலை 01 ஆந் திகதியில் உள்ளவாறு சிரேஸ்ட நிலைப் பதிவேடு நாளதுவரையாக்கி பகிரங்கப்படுத்த வேண்டிய போதிலும் திணைக்களத்தால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2024.07.01 ஆம் திகதி முதல் திணைக்களத்தின் இணையப்பக்கத்தில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | அரச நிதி சுற்றறிக்கை 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய இலக்கம் 01/2020 என்ற சுற்றறிக்கை | | | |
| | 11.1 ஆம் பந்தி | கடந்த ஆண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வின் போது இனங்காணப்பட்ட பொது 47 அறிக்கையில் குறிப்பிடப்பட்ட 07 விடயங்களுக்குரிய 48 பொருட்கள் தொடர்பாக சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தகவல் தொழில்நுட்பப் பிரிவின் தகவல் பெற்றுக்கொள்வதற்காக அனுபவம் உள்ள பதவியணியினரின் பற்றாக்குறையின் காரணமாக பரிந்துரை பெற்றுக்கொள்ளாமையின் அடிப்படையில் பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் தாமதமடைந்துள்ளதுடன் தகவல்களை ஆய்வு செய்து தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்படைய சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| | 13.2 ஆம் பந்தி | 2021 ஆம் ஆண்டுவரையிலும் விற்றுத்தீர்பதற்காக இனங்காணப்பட்ட 05 வாகனங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் விற்றுத்தீர்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 03 வாகனங்களின் செசி இலக்கம் அழிந்துள்ளமையால் அந்த வாகனங்கள் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டிய நடைமுறைகள் ஆலோசனைகள் கோரி 2024.01.12 ஆம் திகதி கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளதுடன் மேலும் பதில் கிடைக்காதிருந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்படைய சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படல் வேண்டும். |
| (vi) | 2023 நவம்பர் 30 ஆம் திகதி இலக்கம் 05/2023 என்ற அரச கணக்குகள் வழிகாட்டி | | | |
| | 3.1 ஆம் பந்தி | புதிய சிகாஸ் இணையம் ஈடுபடுத்தல் முறைமையில் பெறவேண்டிய SA-12, SA-21, SA-50, SA-90 மற்றும் இணைப்பு iii – கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றின் இறுதி திறைசேரி | SA-12 , SA-21, SA-50 மற்றும் SA-90 இணைப்பில் சமர்ப்பித்தல் தவறவிடப்பட்டிருந்த போதும் சிகாஸ் CIGAS இணைய ஈடுபடுத்தல் பொறுப்புக்கள் | கணக்குகள் வழிகாட்டிகளுக்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கணக்கு கூற்று மற்றும் மாதிரி படிவத்தில் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தரவேற்றும் இயலுமை காணப்படாதிருந்தமையால் இணைப்பு iii – கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று சமர்ப்பிப்பதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (vii) | 2022 ஒக்தோபர் 21 ஆந் திகதிய இலக்கம் 15/2022 என்ற பதிவாளர் நாயகத்தின் சுற்றறிக்கை | 13 காணிப் பதிவாளர் அலுவலகங்களில் இருந்து மீளாய்வாண்டிற்குரிய 103 அறிக்கைகள் பதிவாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. | அநேகமாக காணிப்பதிவாளர் அலுவலகத்திலிருந்து ஒட்டுமொத்த நிதி அறிக்கை உரிய பிரகாரம் பிரதான அலுவலகத்திற்கு அனுப்பபட்டுள்ளதுடன் அவ்வாறு அறிக்கை அனுப்பாத அலுவலகங்களுக்கு மீள் நினைவூட்டல் அனுப்பி விரைவாக அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்படைய சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படல் வேண்டும். |

## 2.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

### (i) அதிகார பலம் இன்றிய கொடுப்பனவுகள்

திணைக்களத்தால் அதிகார பலம் இன்றிய பின்வரும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஈ - காணி செயற்திட்டத்தின் கீழ் 04 காணிப்பதிவாளர் அலுவலகங்களில் 3,751,113 காணி வரலாற்றுத்தாள்கள் 03 மாதங்களுக்குள் தரவேற்றம் செய்தல் மற்றும் தரவுகளை உள்ளடக்குவதற்காக ரூபா 83,687,331 மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திட்டதிற்குரிய மீள் கையளித்தல் கடிதம் 2023 ஆகஸ்ட் 29 ஆம் திகதி விநியோகிக்கப்பட்டு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தரவேற்றம் | வரலாற்றுத்தாள்களை தரவேற்றம் செய்யும் பெறுகைப் பணிகள் 2023 யூலை மாதம் பத்திரிகை அறிவித்தல் பிரசுரித்தலின் மூலம் 2023.08.21 ஆந் திகதி பெறுகைக்குழு வழங்கிய தீர்மானம் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகைப்பணிகளை கையளிக்கும் கடிதம் 2023.09.02 ஆம் திகதி அந்த நிறுவனம் கையேற்றமைக்கு | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க சகல கொடுப்பனவுகளும் முறையாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்ட வரலாற்று தாள் 3,614,823 இற்காக ரூபா 80,646,700 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த செலுத்துதலுக்காக இரு தரப்பினர்களுக்குமிடையே கைச்சாத்திட்டப்பட்ட முறையான உடன்படிக்கையின் நிதிப்பிரமானம் 136 மற்றும் 137 இன் பிரகாரம் அதிகாரபலம் மற்றும் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. எனினும் 2024 மார்ச் 20 ஆந் திகதி இருதரப்பினரும் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர். | மீள்கையேற்றல் கடிதம் கையளிக்கப்பட்டிருந்தது. அதன் மூலம் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடாத போதும் அதன் மூலம் பதிவாளர் நாயகம் திணைக்களம் மற்றும் உரிய நிறுவனத்திற்கிடையே உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. எனினும் 2024.03.20 ஆந் திகதி உரிய நிறுவனம் மற்றும் பதிவாளர் நாயக திணைக்களம் உடன்படிக்கை கைச்சாத்திட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 2.8 முற்பணம் வழங்குதல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் உரிய பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் அந்த உபகட்டுநிதி தீர்க்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 724,535 ஆன 16 உப கட்டுநிதிகளை தீர்த்து வைப்பதற்கு உரிய உத்தியோகத்தர்கள் 18 நாட்கள் முதல் 05 மாதங்கள் வரையான காலவீச்சில் தாமதிக்கப்பட்டிருந்தது. | இதன் பின்னர் பல்வேறு பணிகளுக்காக பெறப்படுகின்ற முற்பணங்கள் உரிய பணிகள் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்த்தது வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | முற்பணங்களை உரிய காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இரண்டு உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட ஆரம்ப முற்பணத்தை தீர்ப்பதற்கு முன்னர் 19 சந்தர்பங்களின் போது ரூபா 864,100 ஆன முற்பணம் மீண்டும் | ஒரே உத்தியோகத்தர்களின் பெயரில் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் அந்த முற்பணம் பல்வேறு பிரிவுகளின் | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்த இரண்டு உத்தியோகத்தர்கள் கையில் முற்பணத்தில் வைத்திருக்கும் அளவு ரூபா 100,000 இனை விஞ்சியிருந்த போதிலும் அதற்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திலுருந்து முன் அனுமதி பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிகளுக்காகவே வழங்கப்பட்டிருந்தமையும் இதன் பின்னர் முற்பணங்கள் கோருகின்ற உத்தியோத்தரால் அதற்கு முன்னர் பெறப்பட்டுள்ள முற்பணம் தீர்த்து வைக்கப்பட்டிருக்குமாயின் மாத்திரம் புதிய முற்பணம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் முழுமையாக பூர்த்தி செய்யும் எதிர்பார்ப்பில் ஆண்டுக்குரிய திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 108 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்ட 08 பொறுப்பு துறைகளுக்குரிய செயற்பாடுகளில் 14 நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுப்பதனை மேற்பார்வை செய்தல் வேண்டும். |

**3.2 எதிர்பார்க்கப்பட்ட பூர்த்தி மட்டம் பெறப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) ஈ - டைட்டில் நிகழ்ச்சித் திட்டம் (e-Title) | | |
| ஈ- காணி (e-Land) செயற்திட்டத்திற்குரிய வரலாற்றுத்தாள் தரவேற்றம் செய்யும் நடவடிக்கைகள் இரண்டு தனியார் | 2022 ஆம் ஆண்டு வரையில் ஈ – காணி மென்பொருளில் I ஆம் மற்றும் II ஆம் கட்டம் அநேகமாக பூர்த்தி | பல வருட காலம் முதல் அமுல்படுத்தப்படு கின்ற நிகழ்ச்சித் திட்டங்களிலிருந் |

நிறுவனங்களினால் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கபட்டு 2018 ஆம் ஆண்டு வரை 20 காணிப்பதிவாளர் அலுவலகங்களில் 11,595,197 வரலாற்றுத்தாள்கள் தரவேற்றம் செய்யப்பட்டிருந்ததுடன் குறித்துரைத்த 07 காணிப்பதிவாளர் அலுவலகங்களில் நிகழ்ச்சித்திட்டத்தில் அமுல்படுத்தப்படாத 03 காணிப்பதிவாளர் அலுவலகங்கள் மற்றும் கொழும்பு காணிப்பதிவாளர் அலுவலகத்தில் 2023 நவம்பர் 29 ஆம் திகதி வரையில் 3,624,151 வரலாற்றுத்தாள்கள் தரவேற்றம் செய்து பூர்த்தி செய்வதற்கு தனியார் நிறுவனமொன்றுக்கு மீண்டும் கையிளிக்கப்பட்ட போதிலும் குறித்துரைத்த திகதி வரையிலும் தரவேற்றம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட வரலாற்றுத்தாள்களின் எண்ணிக்கை 2,020,903 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 9,328 வரலாற்றுத்தாள்கள் தரவேற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் 2013 ஆம் ஆண்டு முதல் இதுவரை தரவேற்றம் செய்யப்பட்ட வரலாற்றுத்தாள்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கவேண்டிய முறையை உள்ளடக்கிய திட்டமுறைமையொன்று மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் தயாரிக்கப்படாதிருந்துடன் அந்த வரலாற்றுத்தாள்களுக்குரிய உரித்துறுதிகளின்

செய்யப்பட்டு 2023.01.01 ஆம் திகதி கொழும்பு மற்றும் கோமாகம காணிப்பதிவாளர் அலுவலகங்களுக்கு ஸ்தாபிக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டு தேவையான நவீனமயப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் குறித்துரைத்த 07 அலுவலகங்கள் கொழும்பு அலுவலகம் மற்றும் ஏனைய 03 அலுவலகங்கள் வரலாற்றுத்தாள் தரவேற்றம் செய்யப்பட்டிருந்தது. 2023 ஆகஸ்ட் மாதத்தின் போது நவீன மயப்படுத்தப்பட்ட ஈ – காணி மென்பொருளில் I ஆம் கட்டம் கொழும்பு காணிப்பதிவாளர் அலுவலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டு 2023.12.15 வரை அதன் சகல பிரிவுகளுக்காகவும் தரவேற்றம் செய்யப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை விரைவாக அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இரண்டாவது பிரதிகள் தரவேற்றம் செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(ஆ) ஈ – காணி பதிவு செய்தல் நிகழ்ச்சித் திட்டம் (e – Land Registry Program)

காணி பதிவேடுகளை பரீட்சிக்கும் நடவடிக்கைகள் இணையவழியூடாக மேற்கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்கும் ஆவணங்களை பதிவு செய்யும் நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்குடன் அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட ஈ-காணி (e – Land) கணனி நிகழ்ச்சித்திட்டம் மீள்வடிவமைக்கும் நடவடிக்கைகள் 2016 ஆம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்ட போதும் மென்பொருள் காணப்பட்ட பிரச்சனைகளின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் அதிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் முதலாவது கட்டத்தின் கீழ் கடந்த ஆண்டின் போது வழங்கப்பட்ட ரூபா 98.7 மில்லியன் இயந்திரம், உபகரணங்கள் மற்றும் ஏனைய துணைப்பாகங்களின் மென்பொருள் செயற்பாடுகளை ஸ்தாபித்து செயற்திட்டத்திற்குரிய நடவடிக்கைகள் 06 காணிப்

மென்பொருளில் மீள் வடிவமைத்தல் நடவடிக்கைகள் 2018 ஆம் ஆண்டின் பின்னர் ஆரம்பிக்கப்பட்டதுடன் மென்பொருளில் I மற்றும் II கட்டங்கள் அநேகமாக பூர்த்திசெய்யப்பட்டுள்ளதுடன் அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட கட்டண அதிகரிப்பு மற்றும் 2022.11.04 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட சட்ட திருத்தங்களுக்கு இணங்க மென்பொருள் தயாரித்து மீள்வடிவமைக்கும் நடவடிக்கைகள் நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டமையால் தேவையான ஆவணபடுத்தல் தகவல்கள் தொழிலநுட்ப முகவராண்மை நிறுவனத்திற்கு 2022/2023 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட போதும் அதற்காக தேவையான அங்கீகாரம் மேற்கூறப்பட்ட நிறுவனத்தால் மென்பொருள் வடிவமைக்கின்ற நிறுவனத்திற்கு வழங்கியதன் காரணமாக 2023 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதத்தின் போது மாத்திரம் தொழில்நுட்ப அமைச்சின் பங்குபற்றலுடன் மென்பொருளில் மிகுதி நடவடிக்கைகள்

பல வருடகாலம் முதல் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை விரைவாக அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | பதிவாளர் அலுவலகங்களில் மாத்திரமே அமுல்படுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்டதுடன் 2024 ஏப்ரல் மாதம் வரையில் 08 காணிப்பதிவாளர் அலுவலகங்களில் மென்பொருளின் I ஆம் கட்டம் ஸ்தாபிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | ஈ - சனத்தொகை பதிவேட்டு நிகழ்ச்சித்திட்டம் (e-Population Registry Program) | | |
| | அரச துறை மீள்வடிவமைத்தல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பிறப்பு , விவாகம் மற்றும் இறப்பு தொடர்பான சிவில் பதிவு செய்யும் சம்பந்தமான தகவல்களை உள்ளடக்கி நாளதுவரையாக்கப்பட்ட தகவல் முறைமையொனறை பேணிச் செல்வதற்காக 2010/2011 ஆம் ஆண்டு வரையில் வடிவமைக்கப்பட்ட மென்பொருளின் முறைமை 2019 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தபடாதிருந்ததுடன் பின்னர் 2021 சனவரி 01 ஆந் திகதி முதல் தீர்மாணிக்கப்பட்ட செயற்திட்டமாக தெரிவு செய்யப்பட்டு 06 பிரதேச செயலகங்களில் அமுல்படுத்தப்பட்டதுடன் நாட்டின் சகல பிரதேச செயலகங்கள் மூலம் 2021 சனவரி 01 ஆந் திகதி முதல் ஏற்பட்ட சகல பிறப்பு மற்றும் இறப்புக்குரிய தரவுகளை உள்ளடக்குதல் ஆரம்பிக்கப்பட்ட போதும் அந்த சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் காணப்படுகின்ற பிரச்சனைகள் மற்றும் போதியளவான உட்கட்டமைப்பு வசதிகள் | ஈ சனத்தொகை பதிவேட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் தேசிய பிறப்புச் சான்றிதழ் விநியோகிக்கும் மாவட்டங்கள் தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டம் 2023.12.05 ஆம் திகதி முதல் களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு தற்போது வரையில் தேசிய பிறப்புச் சான்றிதழ் விநியோகதித்தல் மாவட்டத்தில் சகல பிரதேச செயலகங்கள் மூலமும் மேற்கொள்ளப்படுகின்றது. இதில் அடுத்த படிமுறையாக தெஹிவளை, கம்பஹா, குருநாகல், இரத்தினபுரி, தமன்கடுவ மற்றும் ஹங்குரன்கெத்த போன்ற 06 பிரதேச செயலகங்களில் தேசிய பிறப்புச்சான்றிதழ் விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. LGN பிரச்சனை மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் காணப்படாத போதும் ஏனைய அலுவலகங்களிலும் தற்போது தரவுகள் உள்ளடக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | பல வருடகாலம் முதல் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை விரைவாக அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காணப்படாமையின் அடிப்படையில் ஒரு மாவட்டத்தில் மாத்திரம் சான்றிதழ் விநியோகித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. 25 மாவட்டங்களுக்குரிய பிரதேச செயலகங்களில் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்குரிய மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பதிவு செய்யப்பட்ட 809,569 பிறப்புக்களில் 363,013 மற்றும் பதிவு செய்யப்பட்ட 530,920 மரணங்களில் 217,430 மாத்திரம் தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டதுடன் விவாகம் தொடர்பான தகவல்கள் எதுவும் பிரதேச செயலகங்களில் பேணிச்செல்லப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் இந்த நிகழ்ச்சித்திட்டத்திலிருந்தும் எதிர்பார்க்கப்பட்ட பெறுபேறுகளை கைப்பற்றுவதற்கு முடியாதிருந்தது. | அந்த மாவட்டங்களிலும் தேசிய பிறப்புச் சான்றிதழ் விநியோகித்தல் ஆரம்பிப்பதற்கு முன்னர் அந்த வசதிகள் மற்றும் திணைக்களத்தின் DR site மற்றும் Backup முறைமையும் ஸ்தாபித்தல் தேவையாகக் காணப்பட்டது. பிறப்பு மற்றும் இறப்பை பதிவு செய்வதற்கு உரியதாக மாத்திரம் இதுவரையில் தரவு முறைமை தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மரணங்களை பதிவு செய்தல் மற்றும் விவாகங்களை பதிவு செய்தல் தொடர்பாகவும் அபிவிருத்தி செய்யும் சில சேவைகள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்கின்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |

## 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 இன் பிரகாரம் மீளாய்வாண்டுக்குரிய பெறுகைத்திட்டம் தயாரிக்கப்படும் போது வழிகாட்டல்களுக்கு இணங்க ஆகக் குறைந்தது எதிர்வரும் 03 வருடகாலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகள் பிரதான பெறுகைத் திட்டத்தில் | பிரதான பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள படிவத்தில் மூன்று வருட கால தகவல்களை குறிப்பிடுவதற்கு இடம் ஒதுக்கப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. எனினும் மூன்று வருட தகவல்களை பதியும் இயலுமை தொடர்பாக கண்டறிந்து எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கும், பிரதான பெறுகைத் திட்டம் | தொடர்புடைய வழிகாட்டிக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உள்ளடக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான பெறுகை நடவடிக்கைகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது. அவ்வாறே பிரதான பெறுகைத்திட்டம் 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தின் போது நாளதுவரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக்கப்பட்டுள்ள போதும் 06 மாதங்களுக்கு மேற்படாத காலத்தின் போது நாளது வரையாக்கப்படாதிருந்தமையும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.3 (அ) இன் பிரகாரம் கூறுவிலை திறத்தல் குழு நியமித்தல் பெறுகை சபையினால் மேற்கொள்ள வேண்டிய போதும் ரூபா 2,099,900 பெறுமதியான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக 2023 மார்ச் 29 ஆந் திகதி கோரப்பட்ட கூறுவிலை, பெறுகை சபையினால் நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த பெறுகைகளுக்குரிய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை வழங்குவதற்கு தாமதமடைந்தமை, செயலாற்றல் காப்புறுதி பெற்றுக்கொள்ளல் மற்றும் உடன்படிக்கை கைச்சாத்திடல் தாமதமடைந்தமை காரணமாக உரிய பொருள்கள் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு கூறுவிலைத் திகதியிலிருந்து 05 மாதகாலம் எடுத்திருந்தது. | கணக்காய்வின் விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்ட பின்னர் பெறுகை வழிகட்டிக் கோவையின் 6.3.3 (அ) இன் பிரகாரம் கேள்வி திறத்தல் குழுவிற்காக 2023.08.22 ஆந் திகதி திணைக்களப் பெறுகைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் அங்கத்தவர்களுக்கு தவிர்க்க முடியாத ஏனைய அவசர கடமை நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டி ஏற்பட்டமை மேலும் சில விடயங்களின் காரணமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை வழங்குதல் தாமதமடைந்திருந்ததுடன் வழங்குனர்களினால் திணைக்கள பிரதேச அலுவலகங்களுக்கு உபகரணங்கள் வழங்கும் கூறுவிலை கோரப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் , நான்கு மாதங்களுக்கிடையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. செயலாற்றல் பிணைமுறி பெற்றுக்கொள்ளல் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடல் தாமதமின்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடையக வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் போது தகவல் தொழில்நுட்ப பிரிவிற்காக ரூபா 590,000 தொகையில் Windows Savers செயற்பாட்டு முறைமையொன்று கொள்வனவு செய்வதற்கான கேள்வி ஆவணங்கள் பெறுகை மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மேற்கொள்ளப்பட்டதுடன் அதற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது இந்த நிலைமை சரிசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடையக வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) இன் பிரகாரம் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு முன்னர் முறையான ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாதிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ரூபா 1,487,500 பெறுமதியான 05 கணனி இயந்திரங்கள் கொள்வனவு செய்வதற்குரிய உடன்படிக்கையில் கொள்வனவு செய்யப்பட்டு $1\frac{1}{2}$ மாதங்கள் கடந்த பின்னரே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன் அதற்குரிய கெள்வித்திறத்தல் குழுவிற்கு பெறுகைக் குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு முன்னர் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்படாதிருந்தமையும் எதிர்காலத்தில் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பிடுவதுடன் கேள்வி திறத்தல் குழுவிற்காக திணைக்கள பெறுகைக் குழுவின் அங்கீகாரம் 2023.08.22 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.12 இன் | உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் இலக்கம் CGIR/2020/02-2 மற்றும் | செலுத்தப்படுகின்ற பெறுமதி சேரி வரி தொடர்பான |

| | | |
|---|---|---|
| பிரகாரம் பெறுமதி சேர் வரிக்காக பதிவு செய்த வழங்குனர்கள் / ஒப்பந்தகாரர்களுக்கு செலுத்தப்படுகின்ற பெறுமதி சேர் வரி தொடர்பான விபரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதியுடன் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2020.05.26 ஆந் திகதிய கடிதத்தின் பிரகாரம் ஒவ்வொரு காலாண்டின் இறுதியின் போதும் குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்ப வேண்டியிருந்ததுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு பிரதி அனுப்பப்படாதிருந்தமையும் எதிர்காலத்தில் அதன் பிரயொன்றை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்படல் வேண்டும். |

## 3.4 நட்டம் மற்றும் இழப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்கத்திற்குரிய வாகனம் ஒன்று 2022 சனவரி 20 ஆந் திகதி விபத்திற்குட்பட்டதன் காரணமாக ஏற்பட்ட நட்டம் ரூபா 1,735,950 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் விபத்து ஏற்பட்டு 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் 2024 மே மாதம் வரையிலும் பரிசோதனைகள் பூர்த்தி செய்யப்படாமல் இழப்புத் தொடர்பாக நிதிப்பிரமாணம் 104(1)(அ), நிதிப்பிரமாணம் 104(3) மற்றும் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 2.5 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் புறக்கணிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 104(1)(அ) இன் பிரகாரம் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் அறிக்கை கிடைத்தவுடன் மிகுதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கை மற்றும் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இந்த இழப்பு ஏற்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் | தற்போது வாகனத்தின் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் | பழுதுபார்த்தலை தாமதமின்றி மேற்கொண்டு |

| | | |
|---|---|---|
| 2024 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையிலும் உரிய வாகனத்தின் பழுது பார்த்தல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | இறுதிக்கட்டத்தில் காணப்படுகவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சொத்துக்களுக்கு ஏற்படுகின்ற இழப்புக்களை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 சனவரி 27 ஆம் திகதி வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 01/2023 இன் 02(அ) இன் பிரகாரம் நீதிச்சட்ட அல்லது உடன்படிக்கை கடப்பாட்டிற்கான செலவினங்கள் , வாடகை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான வரிக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் போன்றவை பதிவழிப்பதற்கு ஆலோசனை வழங்கப்படாதிருந்த போதிலும் அவ்வாறான செலவினத்திற்காக மீளாய்வாண்டுக்கு உரியதாக வழங்கப்பட்ட ரூபா 7,015,508 நிதியேற்பாடு சுற்றறிக்கையின் பிரகாரம் செலவின வரையறையாக காண்பிக்கப்பட்டு பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்து ஆண்டுக்குரியதாக கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 10,474,112 தொகை ஆண்டின் இறுதியில் பொறுப்பாக பொறுப்புக்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் வருமானம் உழைப்பிற்கு நேரடியாக தொடர்புடைய நிறுவனங்களுக்கு 1201 இன் மூலம் செலுத்துவதற்கான ஏற்பாடுகளை வழங்கப்பட்டதன் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாணம் 143(2) மற்றும் 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 04(ஆ) பந்தியின் பிரகாரம் சகல அரசாங்க நிறுவனங்களினாலும் நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் அறிவிடுவதற்குரிய நிலுவை வருமானம் மேலும் ஒன்று சேர்வதைத் தடுப்பதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்தது. கடந்த சில வருடங்களின் போது ஒட்டுமொத்த நிலுவை மீதி படிப்படியாக அதிகரித்திருந்த போதிலும் ஒட்டுமொத்த நிலுவைப்பணத்தையும் அறவிடுவதற்காக அல்லது 2022 இன் 31 ஆம் இலக்க சட்டத்தரணி திருத்த சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது திணைக்களத்தில் காணப்படுகின்ற ஒட்டுமொத்த நிலுவைப்பணத்தை அறவிட முடியாதிருக்குமாயின் அது தொடர்பாக உரிய சட்டத்தரணிக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு 15/2022 சுற்றறிக்கையில் அறிமுக்கப்படுத்தப்பட்டுள்ளது . அவ்வாறே வருடாந்த சட்டத்தரணி அனுமதிப்பத்திரம் விநியோகிப்பதற்கு முன்னர் சட்டத்தரணிகளிடமிருந்து ஒட்டுமொத்த நிலுவைப்பணம் தொடர்பான அறிக்கையொன்று தமது அதிகாரப் பிரதேசத்திற்குரிய ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் அறிவிக்குமாறு சகல காணிப்பதிவாளர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் ஒட்டுமொத்த நிலுவைப்பணத்தையும் அறவிடுவதை துரிதப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஒட்டுமொத்த நிலுவை அறிக்கையும் சகல காணிப்பதிவாளர்களினாலும் 2024 ஏப்ரல் மாதத்தில் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணம் மற்றும் சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) (i) | இலங்கை சனநாய சோசலிசக் குடியரசின் இலக்கம் 1589/30 அதிவிசேட வர்த்தமாணி மூலம் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணி நடைமுறை விதி 96, 97, 101, 103, 105 மற்றும் 106 இன் பிரகாரம் மூன்று வருடங்கள் தகுதிகாண் காலம் அல்லது ஒரு வருட பதிற்கடமைக் காலத்தின் கீழாகும் வகையில் | நிரந்தரமாக்குவதற்கான தகைமைகளை பூர்த்தி செய்துள்ள உத்தியோகத்தர்கள் தற்போது பதவியில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளதுடன் தகைமைகள் பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களுக்கு அந்த தகைமை தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த குறைபாடுகளை பூர்த்தி செய்கின்ற உத்தியோகத்தர்களை நிரந்தரமாக்கும் | பணி நடைமுறை விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அது தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கும் அது தொடர்பாக அவர்களின் கோவையில் குறிப்பிடுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | பதிவாளர் சேவையின் III வகுப்பின் II தரத்தில் 2005 முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலத்தில் சேர்க்கப்பட்ட 30 உத்தியோகத்தர்கள் மற்றும் 2018 ஆம் ஆண்டின் போது சேர்க்கப்பட்ட 45 உத்தியோகத்தர்களின் நியமனத்தை நிரந்தரப்படுத்துவதற்கு அல்லது தகுதிகாண் காலத்தை நீடிப்பதற்கோ அல்லது பதவியினை முடிவுறுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ii) | பணி நடைமுறை விதி 132 இன் பிரகாரம் அரசாங்கத்தின் உத்தியோகத்தருக்கு தமது வினைத்திறமைகாண் தடையை விஞ்சுகின்ற திகதியின் பிரகாரம் அவரின் சிரேஸ்ட நிலை சீராக்க வேண்டிய போதிலும் 2023 ஒக்தோபர் 31 வரை தமது வினைத்திறமைகாண் தடையினை விஞ்சுவதற்கு தவறியிருந்த 41 உத்தியோகத்தர்களிடமிருந்து சிரேஸ்ட நிலை வினைத்திறமைகாண் தடையில் குறித்துரைத்த திகதியில் சித்தியடைந்த உத்தியோகத்தர்களின் சிரேஸ்ட நிலை மற்றும் சமப்படுத்தும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இந்த உத்தியோகத்தரின் வினைத்திறமைகாண் தடை பரீட்சையின் பெறுபேறுகள் கிடைத்த பின்னர் சிரேஸ்ட நிலை பதிவேட்டை தயாரித்து மாற்றப்படுவதுடன் 2023 ஒக்தோபர் மாதம் நடைபெற்ற பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில் இந்த ஆவணங்களை நாளதுவரையாக்கி 2024.07.01 ஆம் திகதி முதல் திணைக்கள இணையதள பக்கத்திலும் உள்ளடக்குவற்கு நடவடிக்கை எடுக்கப்படவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்துரைத்த காலத்தில் வினைத்திறமைகாண் தடை பரீட்சைகளை நடாத்தி சிரேஸ்ட நிலையினை உரிய பிரகாரம் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | பணி நடைமுறை விதி 135 இன் ஏற்பாடுகளுக்கு முரணாகவும் மற்றும் தாபனவிதிக்கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16:10 பிரிவில் பிழையாக அறிக்கைப்படுத்தப்பட்டு சம்பளமற்ற விடுமுறை பெற்றிருந்த குறித்துரைத்த | தாபனவிதிக் கோவையின் XII ஆம் அத்தியாயத்தின் 16:10 பிரிவின் பிரகாரம் சம்பளமற்ற வெளிநாட்டு விடுமுறை பெற்ற உத்தியோகத்தர்களின் விமுறைக்காலப் பகுதியில் சம்பள அதிகரிப்பு செலுத்துதல் மற்றும் பதவி | உத்தியோகத்தர்களின் சிரேஸ்ட நிலையினை தீர்மானிக்கும் போது பணி நடைமுறை விதி மற்றும் தாபனவிதிக்கோவையின் |

| | | | |
|---|---|---|---|
| | காலத்தில் வினைத்திறமைகாண் தடை பரீட்சையில் சித்தியடையாத சில உத்தியோத்தர்களின் சிரேஸ்ட நிலை அவ்வாறு விடுமுறை பெறப்படாத உத்தியோகத்தர்களின் சிரேஸ்ட நிலைக்கு மேல் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | உயர்வு பணிகளுக்காக கவனத்தில் கொள்ளவேண்டியிருந்தமையால் அந்த விடுமுறைக்காலம் சேவைக்காலத்திலிருந்து குறைக்கப்பட்டு சிரேஸ்ட நிலைப் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஏற்பாடுகள் நாளதுவரையாக்கியதன் பிரகாரம் அர்த்தப்படுத்தப்படல் வேண்டும். |
| (iv) | பணி நடைமுறைவிதி 122 மற்றும் 123 ஏற்பாடுகளின் பிரகாரம் சேவை பிரமாணத்தில் அல்லது ஆட்சேர்ப்பு நடைமுறையில் அல்லது குறித்துரைத்த பிரகாரம் வினைத்திறமைகாண் தடை பரீட்சை நடாத்த வேண்டியிருந்த போதிலும் பதிவாளர் சேவையின் III வகுப்பின் II தரத்தின் உத்தியோகத்தர்களுக்காக வருடாந்த வினைத்திறமைகாண் தடை பரீட்சைகள் இரண்டு நடாத்த வேண்டியிருந்த போதிலும் 2013 சனவரி முதல் 2023 ஆம் ஆண்டின் இறுதிவரையான 11 வருட காலத்தில் 05 வினைத்திறமைகாண் தடை பரீட்சைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. | 2013.01.19 ஆம் திகதிய பதிவாளர் சேவையின் III/II பதவிக்கு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டதுடன் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது அது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிருவாகத்தால் (SLIDA) இனால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் வினைத்திறமைகாண் தடை பரீட்சைகளை நடாத்துவதற்காக இதுவரையில் SLIDA நிறுவனத்தால் மதிப்பீடு கோரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | குறித்த கால எல்லையில் வினைத்திறமைகாண் தடை பரீட்சை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (v) | பணி நடைமுறை விதி 251 இன் பிரகாரம் அதிகார தரப்பினரால் அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் திணைக்களத்தின் தேவைகளுக்கு இணங்க வருடாந்த இடமாற்றல் கொள்கை நடைமுறைகள் தயாரித்து ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான அங்கீகாரம் இடமாற்றல் நடைமுயையொன்று கணக்காய்வின் போது | இந்த திணைக்களத்தின் திணைக்களமயப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் இடமாற்றங்கள் அநேகமானவை ஆண்டின் நடுப்படுப்பகுதியில் அமுல்படுத்தப்படுவதுடன் கட்டளை விநியோகிக்கப்பட்டதுடன் அதற்கான இடமாற்றல் நிகழ்ச்சித் திட்டம் முன்னைய ஆண்டின் இறுதியின் போது தயாரிக்கப்படுகின்றது. 2025.01.01 ஆம் திகதியின் | பணி நடைமுறை விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவதானிக்கப்படா திருந்ததுடன் திணைக்கள மயப்படுத்தப்பட்ட சில உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் உரிய திட்ட முறைமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படாதிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டது. | பின்னர் அடுத்து வரும் ஆண்டிற்கான இடமாற்றல் கொள்கை தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. அது முடிவடைந்த பின்னர் அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட களஞ்சிய இருப்பு தொடர்பாக விசேட மெய்மையாய்வு மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட நான்கு நபர்களை உடைய குழு 2023 செம்டெம்பர் 26 ஆம் திகதிய அறிக்கையின் பிரகாரம் பெறுமதி ரூபா 507,764 ஆன 14 விடயங்கள் 3,453 பொருட்களின் பற்றாக்குறை மற்றும் 31 விடயங்களில் 428 பொருட்களின் மிகை தொடர்பாக ஆரம்ப விசாரணை நடாத்துவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எனினும் உரிய விசாரணையின்றி அதுவரையில் சேவையில் ஈடுபட்டிருந்த களஞ்சியப்பொருட்கள் பெறுவனவு மற்றும் விநியோகித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தருக்கு பதவியை விட்டுச்செல்லும் அறிவித்தல் 2023 சனவரி 12 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக ஆரம்ப விசாரணைகளை மேற்கொள்வதற்காக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் புலனாய்வுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த பிரிவின் புலனாய்வு உத்தியோகத்தர்களின் பணிபொறுப்புக்களின் காரணமாக திணைக்களத்தின் புலனாய்வு பிரிவில் மேற்கொள்ளுமாறு அறிவித்து மீண்டும் திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அதற்காக திணைக்களத்தின் புலனாய்வுப் பிரிவின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் முன்மொழியப்பட்ட அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் தாமதம் மற்றும் உரிய பொறுப்புக்கள் இன்றி நடவடிக்கை எடுத்த உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கம்பஹா காணிப்பதிவாளரால் மேற்கொள்ளப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பாக ஆரம்ப விசாரணை ஒன்று நடாத்துவதற்கு 2021 நவம்பர் 09 ஆம் திகதி பதிவாளர் நாயகத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 28 மாதங்கள் அளவிலான காலம் கடந்திருந்த போதிலும் உரிய ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் கொவிட் தொற்று நோய் நிலைமை மற்றும் நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமையின் இடையில் உத்தியோகத்தர்களை அழைத்தல் வரையறுக்கப்பட்டமை மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் காரணமாக இந்தக் காலம் கடந்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. ஆரம்ப விசாரணை வரிசை அமைச்சின் மூலம் ஆரம்பிக்கப்பட்டு உத்தியோகத்தர்களின் வெளிப்படுத்தல்கள் பெறப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபனவிதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கொழும்பு காணிப்பதிவாளர் அலுவலகத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற சில உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட ஊழல்களை மேற்கொள்ளப்பட்ட இலஞ்சங்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்தல் தொடர்பாக சனாதிபதிக்கு அனுப்பப்பட்ட பெயர் குறிப்பிடப்படாத கடிதம் ஒன்று 2020 யூலை 10 ஆந் திகதி பதிவாளர் நாயகத்திற்கு கிடைத்திருந்ததுடன் இது தொடர்பாக ஆரம்ப விசாரணைகள் மேற்கொண்டு மத்திய வலைய உதவி பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கை 2020 செப்தெம்பர் 14 ஆந் திகதி | 2022 ஆம் ஆண்டு முதல் திணைக்களத்தில் நிலையான புலனாய்வுப் பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டதுடன் அதில் முதலாவதாக உரிய திட்டமுறையொன்றின் ஊடாக புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாததுடன் தற்போது வரையிலும் அந்த நிலைமை கைவிடப்பட்டுள்ளது. தற்போது பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கவேண்டியிருந்ததுடன் விசாரணை அறிக்கை தொடர்பாக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் அதில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | |
| (எ) | பாணந்துறை காணிப்பதிவாளர் அலுவலகத்தில் 2013 ஆம் ஆண்டின் போது ஏற்பட்ட ரூபா 532,600 நிதி மோசடி தொடர்பான குற்றபத்திரத்திற்காக பதிலளிப்பதற்காக 15 மாதகாலம் எடுத்திருந்ததுடன் முறையான ஒழுக்காற்று விசாரணை நடாத்துவதற்கு அல்லது ஏனைய பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு புலனாய்வு அறிக்கையின் திகதியிலிருந்து 22 மாதகாலம் கடந்திருந்தது. இதன் காரணமாக நிதிப்பிரமாணம் 104(2) இன் பிரகாரம் அறிக்கை பொதுத்திறைசேரிக்கு அனுப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது. மேலும் ஆரம்ப விசாரணை அறிக்கையின் பரிந்துரைகளின் பிரகாரம் இந்த நிதிமோசடியை வெளிப்படுத்துவதற்கு தவறிய உத்தியோகத்தருக்கு குற்றப்பத்திரிகை விசாரணை அறிக்கைத் திகதியிலிருந்து 39 நாட்கள் கடந்த பின்னரே விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் கிடைக்கப்பெற்ற பதிலின் அடிப்படையில் மிகுதி ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குவதுடன் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் நிலைமை மற்றும் நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைகளுக்கிடையே உத்தியோகத்தர்களை வரவழைத்தல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளின் காரணமாக இந்த காலம் கடந்திருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. உத்தியோகத்தருக்கு எதிராக முறையான ஒழுக்காற்று விசாரணை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் நிதிமோசடியை வெளிப்படுத்துவதற்கு தவறிய மேலதிக மாவட்ட பதிவாளர் குற்றப்பத்திரிகைக்கு பதிலளித்துள்ளதுடன் மிகுதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் தேவையற்ற தாமதங்களை மேற்கொள்ளாதிருப்பதற்கு கண்காணித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) (i) | காலி காணிப்பதிவாளர் அலுவலகத்தில் 2020 மே 27 ஆம் திகதி இடம்பெற்ற நிதி மோசடி தொடர்பாக அமைச்சின் செயலாளரால் 2020 யூன் 30 ஆம் திகதி நியமிக்கப்பட்ட குழுவினால் 16 மாதங்கள் தாமதிக்கப்பட்டு தமது அறிக்கை , செயலாளரால் 2021 திசெம்பர் 06 ஆந் திகதி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியிலிருந்து 19 மாதங்கள் கடக்கும் வரையிலும் விடுவிப்பதற்கான விடயங்கள் விசாரிக்கப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தினாலும் 2021 ஆகஸ்ட் 30 ஆந் திகதி பதிவாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக குழுவொன்று நியமிப்பதற்கு 05 மாதங்களும் அதன் விசாரணை அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு 14 மாதங்களும் எடுத்திருந்தது. | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் புலனாய்வுப் பிரிவின் மூலம் விசாரணை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் பாதுகாப்பு அமைச்சில் இருந்து கிடைத்த கடிதத்தின் பிரகாரம் பதிவாளர் நாயகத்திடம் இருந்து கிடைத்த கட்டளையின் படி பரிசோதனைகளை நடாத்துவதற்காக 2021.12.14 ஆந் திகதி பிரதான உள்ளக கணக்காய்வாளருக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஆரம்ப விசாரணை அறிக்கை கிடைத்த பின்னர் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்குரியதாக எடுப்பதற்கும் மற்றும் அந்த அவதானிப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அதன் பிரதி 2022.01.05 ஆந் திகதி பிரதான உள்ளகக் கணக்காய்வாளருக்கு அனுப்பப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கை 2023.03.31 ஆந் திகதி வழங்கப்பட்டமையால் அதன் பிரகாரம் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதுட ன் தேவையற்ற தாமதங்களை தவரித்துக்கொள் வதை கண்காணித்தல் வேண்டும். |
| (ii) | தாபன விதிக் கோவையில் II ஆம் தொகுதியின் பிரகாரம் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய பணம் பிழையாக மோசடி செய்தல் மற்றும் அரசாங்க வளங்களை முறைகேடாக பயன்படுத்துதல் அரசாங்க உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்ட | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் ஆரம்ப விசாரணைகள் மேற்கொண்டு ஆரம்ப விசாரணை அறிக்கை எங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த பரிந்துரையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தவறுகள் தொடர்பாக முதலாவது பட்டோலையின் கீழ் உரித்தாகின்ற போதிலும் இந்த ஆரம்ப விசாரணையின் பிரகாரம் அதன் இரண்டாவது பட்டோலையின் கீழ் உரிதாகின்ற தவறாக அர்த்தப்படுத்தப்பட்டு உரிய உத்தியோகத்தருக்கு ஒழுக்காற்று நடைமுறையின் கீழ் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டது. இவ்வாறு மேற்கொள்வதற்கு நேரடியான தொடர்புபட்ட மேலதிக காணிப் பதிவாளர் பிரதான அலுவலகத்திற்கு இடம்மாற்றுவதற்கு பரிந்துரை செய்யப்பட்ட போதிலும் அதனை அமுல்படுத்தாமல் 2023 ஆம் ஆண்டின் வருடாந்த இடமாற்றத்தின் கீழ் பேருவளை பிரதேச செயலகத்திற்கு இடமாற்றம் வழங்குவதற்கும் இவ்வாறு ஏற்படுவதற்கு உதவிகள் புரிந்த குற்றமிழைத்த காணிப்பதிவாளர் நாயகத்திற்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கும் பரிந்துரை வழங்கப்பட்ட போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 2021 ஆகஸ்ட் மாதம் முதல் உதவி பதிவாளர் நாயக பதவியில் முழுநேரக் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 2023 இன் வருடாந்த இடமாற்றலின் கீழ் பெனடதர பிரதேச செயலகத்திற்கு இடம்மாற்றப்பட்டுள்ளது. உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கை திணைக்களத்திற்கு 2021.12.27 ஆம் திகதி கிடைத்திருந்ததுடன் உத்தியோகத்தர் உதவி பதிவாளர் நாயக பதவியில் முழுநேரக் கடமைகளை மேவுகை செய்வதற்காக 2021.08.23 ஆந் திகதியே நியமிக்கப்பட்டமையால் அத்திகதி வரையில் அந்த பரிந்துரையை அமுல்படுத்துவதற்கு காலம் காணப்படாதிருந்தமையாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஐ) | பதிவாளர் சேவையின் III வகுப்பின் II தரத்தின் பதவிக்காக சேர்க்கப்பட்ட சில உத்தியோகத்தர்களுக்கு உரிய வருடாந்த மீளாய்வு அறிக்கை குறித்துரைத்த காலத்திற்கு முன்னர் பூர்த்தி | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதுடன் அது தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டடுள்ளது. | உத்தியோகத்தர் தொடர்பான கோவைகள் உரிய பிரகாரம் மற்றும் நாளதுவரையாக பேணிச்செல்லப்பட |

| | | | |
|---|---|---|---|
| | செய்து அவர்கள் நியமனம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சில உத்தியோகத்தர்களின் நாளது வரையாக்கப்பட்ட ஆளணிக்கோவை முன்னர் சேவையாற்றிய நிலையத்திலிருந்து பெற்றுக்கொள்வதற்கும் தவறியிருந்தது. மேலும் இந்த பதவிக்காக சேர்க்கப்பட்ட சில உத்தியோகத்தர்கள் அவர்களின் எழுத்துமூலப் பரீட்சைகளில் சித்தியடைந்திருந்தமைக்கான பெறுபேறு ஆவணங்களின் உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | | ல் வேண்டும். |
| (ஒ) | பதிவாளர் சேவையின் III வகுப்பின் பதவிகளுக்கு சேர்ப்பதற்காக 2007 நவம்பர் 25 ஆம் திகதி நடாத்தப்பட்ட பரீட்சைப் புள்ளிகள் 232-192 இற்கு இடையிலான புள்ளி அளவினைப் பெற்ற 83 பேர்களுக்கு பதவிகளுக்காக நியமிக்கப்பட்டிருந்த போதும் 250-193 க்கு இடையிலான புள்ளிகளைப் பெற்றவர்களின் எண்ணிக்கையில் 117 விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப்பரீட்சைக்காக கோரப்பட்டமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்படவில்லை. | திறந்த போட்டிப்பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்பட்டிருந்துடன் அதற்காக குறைந்த அளவினரே பங்குபற்றியிருந்தனர். பங்குபற்றியிருந்த அளவினரில் தெரிவு செய்யப்படும் உத்தியோகத்தர் எண்ணிக்கை வெற்றிடங்களை நிரப்புவதற்கு போதியளவில் இல்லாதிருந்தமையால் மேற்கூறப்பட்ட பரீட்சைப் பெறுபேற்றின் அடிப்படையில் மேலும் ஒரு தரப்பினர் நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு தெரிவு செய்யப்படாத 117 விண்ணப்பதாரர்கள் நேர்முகப்பரீட்சைக்காக பங்குபற்றாதிருந்தமை | ஆட்சேர்ப்பினை வெளிப்படையாக மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன் தேவையான தகவல்கள் பேணிச்செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அல்லது நியமனத்தை கையேற்காதிருந்த விண்ணப்பதாரர்களாக இருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |
| (ஓ) | மேற்கூறப்பட்ட (ஒ) பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சைக்குரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று காணப்பாடாதிருந்ததுடன் பதவிகளுக்காக தெரிவு செய்யப்பட்ட 83 விண்ணப்பதாரர்களுக்கு இடையே 04 பாடங்களிலும் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்ற விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை 22 ஆக மாத்திரம் இருந்ததுடன் 61 பேரும் இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்தில் 39 புள்ளிகளை விட குறைந்த புள்ளிகளைப் பெற்றிருந்த விண்ணப்பதாரர்கள் ஆகும். | 2007 ஆம் ஆண்டில் நடைபெற்ற திறந்த போட்டிப் பரீட்சையின் பெறுபேற்று பட்டியலின் ஒழுங்கு முறையின் படி 04 பாடங்களில் புள்ளிகளின் கூட்டுமொத்தத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 04 பாடங்களிலும் 40 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்த விண்ணப்பதாரர்களின் அளவு காணப்படாதிருந்தமையால் 04 பாடங்களிலும் மொத்த புள்ளிகளை அடிப்படையாகக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆட்சேர்பு வெளிப்படையாக மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |
| (ஔ) | திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்காக உரிய அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற சம்பளம் மற்றும் சம்பளமற்ற விடுமுறைகள் தொடர்பாக திணைக்களத்தின் பிரிவுகளுக்கிடையே உரிய தொடர்பு ஒன்று காணப்படாமையின் காரணமாக சில உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம் சரியாக கணிப்பிடப்படாத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | தற்போது அந்த நிலைமை மாற்றியமைப்பதற்கு பிரிவுகளுக்கிடையே தொடர்பினை மேற்கொள்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்களத்தின் பிரிவுகளுக்கிடைே ய சரியான தொடர்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (க) | அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 7.1 இன் மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 238(5) இன் பிரகாரம் மாதாந்தம் சம்பளம் பெறுகின்ற ஒவ்வொரு உத்தியோகத்தரினாலும் சம்பள குறிப்பு பத்திரத்தில் கையொப்பம் இடவேண்டியிருந்தமை சம்பளம் செலுத்துகின்ற உத்தியோகத்தரினால் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத சில உத்தியோகத்தர்களுக்கு அடுத்து வரும் மாதத்தில் சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக எழுத்து மூலமும் வட்ஸ்அப் குழு ஊடாகவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறு இல்லாத உத்தியோகத்தர்களுக்கு மே மாத சம்பளத்தை செலுத்தல் நிறுத்தப்படுவதாக அமைச்சில் நடைபெற்ற பதவிநிலை உத்தியோகத்தர் கூட்டத்தின் போது பிரதான கணக்காளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கா) | 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பயிற்ச்சி பாடநெறி மற்றும் புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டத்திற்காக பங்குபற்றிய மூன்று உத்தியோகத்தர்கள் அவர்கள் பங்குபற்றிய பாடநெறி தொடர்பான அறிக்கை (Presentation) சமர்ப்பித்தமை உறுதிப்படுத்தப்படவில்லை. அவ்வாறே வெளிநாட்டு பயிற்சி பெறுதல் தொடர்பாக தகவல் முறைமையொன்று திணைக்களத்தினால் பேணிச்செல்லப்படவில்லை. | AQ 13 அறிக்கையின் படி 2023 ஆம் ஆண்டில் வெளிநாட்டு பயிற்சி பாடநெறிக்காக பங்குபற்றிய 05 உத்தியோகத்தர்களிடமிருந்து 04 உத்தியோகத்தர்களும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் பங்குபற்றியிருந்த பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. ஏனைய உத்தியோகத்தர்களுக்குரிய அறிக்கை வழங்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. திணைக்களத்தின் அபிவிருத்தி மற்றும் பயிற்சிப் பிரிவு 2021 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டமையால் அதற்குரிய வெளிநாட்டு பயிற்சி சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ள எண்ணிக்கை மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்களை பெறாதிருந்த உத்தியோகத்தர்கள் தொடர்பான | சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் கணக்காய்வுக்கு அது தொடர்பாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முறைமையொன்றை பேணிச்செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (கி) | திணைக்களத்தின் 03 அலுவலகங்களுக்காக கடந்த காலத்திற்குரிய மாதாந்த மின்சாரப்பட்டியல் செலுத்துதல் குறித்துரைத்த காலத்தை விட தாமதமடைந்ததன் காரணமாக மீளாய்வாண்டின் போது அறிவிடப்பட்டிருந்த வட்டி மற்றும் மிகை கட்டணத் தொகை ரூபா 210,633 ஆக இருந்ததுடன் நிலுவைப்பணம் செலுத்தாமை காரணமாக துண்டிக்கப்பட்ட மின்சார வழங்கலை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக அறவிடப்பட்ட மேலதிக கட்டணம் ரூபா 6,000 ஆகும். | மாதாந்த பட்டியலை தீர்த்து வைத்தலை துரிதப்படுத்துவதற்காக தேவையான ஆவணங்களை விரைவாக பெற்றுக்கொள்வதற்காக வட்ஸ்அப் குழு வடிவமைக்கப்பட்டு தேவையா நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. கொரோணா தொற்று நோய் நிலைமை மற்றும் நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான பொருளாதார நிலைமையின் காரணமாக பட்டியல் ஏற்றுக்கொள்ளல் தாமதமடைந்தமை, உத்தியோகத்தர்களை சேவைக்கு அழைத்தல் வரையறுக்கப்பட்டமை போன்ற விடயங்கள் இதற்காக தாக்கமளித்திருந்ததாக குறிப்பிடப்பட்டிருந்தது. | நீர் கட்டணம் மற்றும் மின்சார கட்டண பட்டியல்களை குறித்துரைத்த திகதியில் செலுத்துவதைக் கண்காணித்தல் வேண்டும். |
| (கீ) | மாளிகாவத்தை மத்திய ஆவணக் காப்பகத்தின் மின்சார்பட்டியல் குறித்துரைத்த பிரகாரம் செலுத்தாமையின் காரணமாக மின்சார சபைக்கு செலுத்த வேண்டி ஏற்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பரிசோதனைகள் மேற்கொண்டு அதனை அறவிட வேண்டிய உத்தியோகத்தரிடமிருந்து அது தொடர்பாக கண்டறிவதற்கு பணிப்பாளர் நாயத்தால் 2023 ஒக்தோபர் | மாளிகாவத்தை மத்திய ஆவண காப்பகத்தில் மின்சாரப் பட்டியல் தாமதமாக செலுத்தியதன் காரணமாக மிகைக் கட்டணம் செலுத்த வேண்டிய ஏற்பட்டமை தொடர்பாக ஆரம்ப விசாரணை நடாத்தி பரிசோதனை அறிக்கையொன்றை வழங்குமாறு அறிவித்து கோவை இலக்கம் RG/AB/POU/06/01/04 மற்றும் 2024.02.05 ஆம் திகதி புலணாய்வுப் பிரிவிற்கு | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்ளல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 10 ஆம் திகதி கட்டளை வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் நிதிப்பிரமாணம் 101 இன் பிரகாரம் எந்தவொரு மிகுதி நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்டுள்ளது. தற்போது விசாரணை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (கு) | 2022 திசெம்பர் 20 ஆம் திகதிய HA/05/20/05 என்ற அமைச்சின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் குறித்துரைத்த காலத்தில், செலுத்தப்படாத நிலுவை பட்டியல் ஏற்படுவதற்கான காரணங்களை கண்டறிந்து தேவையான நடவடிக்கையை எடுப்பதற்கும் 2023 ஆம் ஆண்டு முதல் இவ்வாறான நிதி நட்டங்கள் ஏற்படுவதை தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்ததாகவும் ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2023 ஆம் ஆண்டிற்குரியதாகவும் நிலுவைப்பட்டியல் ஏற்பட்டமையினால் 08 அலுவலகங்களுக்குரிய தண்டவட்டி செலுத்த வேண்டி ஏற்பட்டமையால் மேலும் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மின்சாரம் துண்டிக்கப்பட்டமையால் பொது சேவைகள் வழங்குதல் செயலிழப்பதை தவிர்த்துக் கொள்வதற்காக உரிய நிலுவைப்பணத்துடன் பட்டியல்களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அமைச்சின் செயலாளரின் 2022.12.20 ஆம் திகதிய HA/05/20/05 ஆம் இலக்க கடிதத்தில் இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் தவறவிடப்பட்டிருந்ததுடன் நிலுவைப் பட்டியல் செலுத்துவற்குள்ள அலுவலகங்களுக்குரிய விரிவான பட்டியல்களை பெற்று அதன் பிரகாரம் பகுப்பாய்வு செய்து கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையை குறைப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | வரிசை அமைச்சின் செயலாளரின் ஆலோசனையின் படி நடவடிக்கை எடுத்தல் தவறவிடமுடியாதிருந்ததுடன் ஏற்பட்டிருந்த இவ்வாறான தவறுகள் எதிர்காலத்தில் இடம்பெறாமல் இருப்பதற்கு கண்காணித்தல் வேண்டும். |
| (கூ) | வாடகை அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்ட 06 அலுவலகங்களக்குரிய வாடகை உடன்படிக்கைக் காலம் முடிவடைந்து 03-12 மாதங்களுக்கு இடையிலான காலம் கடந்திருந்த போதிலும் புதிய வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திடாமல் ரூபா | உரிய அலுவலகங்களின் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு முன்னர் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மாதாந்த வாடகைக்கான பெறுமதி பெறவேண்டியிருந்தது. மாதாந்த மதிப்பீடு பெற்றுக்கொள்வதற்காக | வாடகை கட்டிடங்களின் வாடகைக் காலம் முடிவடைவதைக் குறித்துரைத்த ரீதியில் இணங்காண முடியுமாக இருந்தமையால் புதிய |

| | | |
|---|---|---|
| 943,500 மாதாந்த வாடகைப் பணம் செலுத்தி மேலும் தொடர்ந்தும் அலுவலகம் நடாத்திச் செல்லப்பட்டிருந்தது. | சிறிது காலம் எடுக்கின்றமையினால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு நேரடியான இயலுமை காணப்படாதிருந்ததை தயவுடன் அறிவிப்பதுடன் இந்த அறிக்கை கிடைத்தவுடன் அலுவலகங்கள் நடாத்திச்செல்ல வேண்டியிருந்தமையால் முன்னர் செலுத்தப்பட்ட மாதாந்த தொகையிலேயே வாடகை செலுத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கைகளுக்கு கைச்சாத்திடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னரே தயார்செய்யப்படல் வேண்டும். |

## 4. நல்லாளுகை

### 4.1 பொதுமக்களுக்கு சேவையினை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| சட்டத்தரணிகள் கட்டளைச்சட்டத்தின் 31 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்ட விதிகள் உரிய பிரகாரம் பின்பற்றப்படாமல் மற்றும் காணப்படுகின்ற குறைபாடுகளை சரிசெய்வதற்கு தாமதமடைந்தமை, அது தொடர்பாக உத்தியோகத்தர்களின் பின்தொடர் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக ஆவணங்களை பதிவு செய்தல் தாமதமடைந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் ஆவணங்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் தாமதமின்றி சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்காத சட்டத்தரணிகள் தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கூறப்பட்ட கணக்காய்விற்குரிய கடுவல காணிப்பதிவாளர் அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட 80 ஆவணங்கள் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் பதிவு செய்யப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது வரையிலும் அந்த ஆவணங்கள் உரிய சட்டத்தரணிகளை அழைத்து சரி செய்து பதிவு செய்து பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளதாக கடுவல காணிப்பதிவாளரால் அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே சரிசெய்யப்படாத குறைபாடுகளுடன் சில உரித்துறுதிகள் நிராகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாகவும் மேலும் அறிவிக்கப்பட்டள்ளது. | கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கிணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 2,818 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 3,916 ஆகும். முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் சேர்க்கப்பட்ட 1,283 அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் மிகையும் மற்றும் சிரேஸ்ட நிலையில் 12 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய 18 பதவி தொகுதிகளில் அங்கீகரிக்கப்பட்ட 185 உத்தியோகத்தர்களின் வெற்றிடமும் அவதானிக்கப்பட்டது. | அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திலிருந்து 2021.09.24 ஆம் திகதிய RG/AB/02/05/25 (நிதிப்பிரமாணம் II ) கடிதத்தின் மூலம் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வெற்றிடமான பதவியணியினராக ஏனைய சேவைகளில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கைகளுக்கு இடையிலான எண்ணிக்கையை காண்பிக்கப்பட்டுள்ளது. கணக்காய்வு அவதானிப்பினை ஏற்றுக்கொள்வதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் ஆட்சேர்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |
| (ஆ) | திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் புத்தகக் கட்டுனர் 77 இல் 03 பதவிகள் மாத்திரம் வெற்றிடமாகக் காணப்பட்ட போதிலும் காலி மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிஞ்சி 06 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டதன் காரணமாக ஏனைய மாவட்டங்களின் பதவிகள் வெற்றிடமாக உருவாகியிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குவதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு குறிப்பிடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பதவியணியினரை உரிய பிரகாரம் முகாமைத்துவம் செய்து செயற்திறனாக சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் பதிவாளர் சேவையின் பிரதி / உதவி பதிவாளர் நாயக பதவிகளின் எண்ணிக்கை 31 ஆக இருந்ததுடன் அத்திகதியில் நியமிக்கப்பட்ட பதிவுகளின் எண்ணிக்கை 25 ஆகும். ஆதன் பிரகாரம் வெற்றிட பதவிகளின் எண்ணிக்கை 06 மாத்திரமாக இருந்த போதிலும் 10 உத்தியோகத்தர்களுக்கு உதவி பதிவாளர் நாயக பதவிகளின் கடமைகளை மேவுகை செய்யும் அடிப்படையில் நியமிக்கப்பட்டமை கணக்காய்வின் போது சர்சைக்குரிய விடயமாக இருந்தது. | சேவைக்கு நியமிக்கப்பட்ட பிரதி / உதவி பதிவாளர் நாயக உத்தியோகத்தர்களில் 25 பேர்களுக்கிடையே மூன்று உத்தியோகத்தர்கள் திணைக்களத்தின் பதிவுகளில் முழுநேர கடமைகளை நிறைவேற்றுவதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கீகாரத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெற்றிடங்களின் எண்ணிக்கை 09 ஆக இருந்ததுடன் 10 காணி பதிவாளர் உத்தியோகத்தர்கள் பிரதி / உதவி பதிவாளர் நாயக பதவிகளில் கடமைகளை மேவுகை செய்தல் / கடமைகளை நிறைவேற்றுதல் / பதிற்கடமை மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பணி நடைமுறை விதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் அதிக பணிப்பொறுப்புக்கள் காணப்படுகின்ற பிரிவு மற்றும் 05 அலுவலகங்களுக்காக நிரந்தர உதவிப் பதிவாளர் நாயகம் நியமிக்கப்படாமல் அந்த பதவிகளின் கடமைகளை மேவுகை செய்வதற்காக 10 காணிப் பதிவாளர்கள் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதிலும் சில உத்தியோகத்தர்களின் கடமை மேவுகை செய்யும் காலம் முடிவடைந்திருந்ததுடன் ஏனைய உத்தியோகத்தர்களின் | இந்த திணைக்களத்தின் வெற்றிடங்கள் காணப்படுகின்ற பிரதி / உதவி பதிவாளர் நாயக பதவிகள் 07 இற்காக தகைமையுள்ள உத்தியோகத்தர்களை சேர்ப்பதற்குரிய விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தல் வரைவு அங்கீகாரத்திற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அதிக பணிப்பொறுப்புக்கள் காணப்படுகின்ற பிரிவுகள் மற்றும் அலுவலகங்களுக்காக அனுபவம் உள்ள மற்றும் நிரந்தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அங்கீகரிக்கப்பட்ட காலம் 2024 யூன் 30 ஆந் திகதி அளவில் முடிவடைவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | | |
| (உ) | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் மூலம் 2009 பெப்ரவரி 20 ஆந் திகதிய இலக்கம் 1589/30 மற்றும் 2022 திசெம்பர் 14 ஆந் திகதி இலக்கம் 2310/29 என்ற அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டிருந்த பணிநடைமுறை விதி 118 மற்றும் 130 இன் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் காணிப்பதிவாளர் பதவியில் கடமைகளை மேவுகை செய்யும் அடிப்படையில் 36 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். | இந்தத் திணைக்களத்தின் வெற்றிடங்கள் காணப்படுகின்ற காணிப்பதிவாளர் (பதிவாளர் சேவையின் II வகுப்பின்) பதவிகளின் கடமைகளை மேவுகை செய்வதற்காக மேலதிக காணி / மாவட்ட பதிவாளர் (பதிவாளர் சேவையின் III வகுப்பின்) ( II/I தரத்தில்) உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். தாபன விதிக்கோவையின் II அத்தியாயத்தின் 13.7 ஆம் பிரிவின் பிரகாரம் மற்றும் VII ஆம் அத்தியாயத்தின் 12.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் கடமை மேவுகை செய்வதற்கு ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் எந்தவொரு மேலதிக ஊதியம் பெறாதிருந்தமையினால் அந்த உத்தியோகத்தர்களுக்காக கடமை நிறைவேற்றும் சம்பளம் அல்லது பதிற்கடமை படியொன்று செலுத்தப்படாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக்கோவையின் II ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் மத்திய அரசின் உத்தியோகத்தர்களுக்கு உரித்தில்லாதிருந்தமையினால் பணி நடைமுறை விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |